**புளத்கொஹுபிட்டிய பிரதேச சபை**

**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 08 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புளத்கொஹுபிட்டிய பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட களஞ்சியப் பொருட்களிலிருந்து வழங்கல் மற்றும் உபகரணக் கணக்குகளுக்குச் சீராக்கப்பட வேண்டிய ரூபா 684,023 தொகை பிழையாக மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதனால் ஆண்டின் பற்றாக்குறை மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகளிலிருந்து வழங்கல் மற்றும் உபகரணக் கணக்குகளில் சீராக்கப்பட வேண்டிய ரூபா 176,425 தொகை பிழையாக மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, ஆண்டின் பற்றாக்குறை மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன அந்த பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டில் கணக்கீட்டுக் குறைபாடுகளின் கீழ் கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட களஞ்சியப் பொருட்கள் மற்றும் காகிதாதிகள் பிழையாக கணக்கீடு செய்யப்பட்டமையை திருத்துவதற்கு திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 286,087 பிழையாக வழங்கல் மற்றும் உபகரணக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் ஆண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2013 ஆம் ஆண்டில் கணக்கீட்டுக் குறைபாடுகளின் கீழ் கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட நன்கொடையாகக் கிடைத்த தளபாடங்கள் ரூபா 149,608 தொகை பிழையாக மூலதன மானியக் கணக்கில் செலவு வைத்தலை சரிப்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது திரண்ட நிதியத்தில் வரவு வைப்பட வேண்டிய அந்தத் தொகை மூலதன மானியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) தனிப்பட்ட பெயரில் விநியோகிக்கப்பட்ட ரூபா 123,070 பெறுமதியான பொருட்கள், தளபாடமும் பொருத்திகளும் கணக்கிலிருந்து அகற்றப்பட்டமையினால் அப்பெறுமானத்தால் சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) சபைக்கு 2013 ஆகஸ்ட் முதல் 2014 ஆகஸ்ட் வரை கிடைக்கவேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 3,258,147 ஆக இருந்த போதிலும், அது வருமானமாகவும் கிடைக்க வேண்டிய வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 2014 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தளபாடம் மற்றும் உபகரணங்களின் 14 விடயங்களின் பெறுமதி ரூபா 140,175 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) சபைக்கு கேகாலை மற்றும் றுவன்வெல்ல நீதவான் நீதிமன்றத்தின் மூலம் நீதிமன்றத் தண்டப்பணமாகக் கிடைக்க வேண்டிய ரூபா 430,217 கூட்டுத் தொகை வருமானமாகவும் பெறவேண்டிய வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நிலையான சொத்துக் கணக்கிற்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிற்குமிடையேயான வேறுபாட்டை கண்டறிந்து நடவடிக்கை எடுக்காது ரூபா 951,856 தொகை திரண்ட நிதியத்திலும் பற்றாக்குறைக் கணக்கிலும் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் மேலும் காணப்பட்ட ரூபா 630,134 தொகை தொடர்பாக உரிய சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டின் போது ஆவணக் காப்பகத்தில் இராக்கைகளை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 145,986 தொகை தளபாடமும் பொருத்திகளினதும் கீழ் மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும், அது வழங்கல் மற்றும் உபகரணங்களின் கீழ் பதிவழிக்கப்பட்டமையால் பற்றாக்குறை அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) ஆண்டின் போது லெப்டொப் வகையான கணனியொன்றைக் கொள்வனவு செய்வதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 50,100 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது இயந்திரம் மற்றும் உபகரணத்தின் கீழ் மூலதனமாக்குவதற்குப் பதிலாக வழங்கல் மற்றும் உபகரணத்தின் கீழ் ஆண்டின் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(க) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடனுக்காக 2014 ஆம் ஆண்டிற்குரிய வட்டி ரூபா 296,509 மற்றும் கடன் தவணை ரூபா 450,388 ஆக இருந்தது. அதில் ஆண்டிற்குரிய வட்டி மாத்திரம் ரூபா 296,509 தொகை வட்டிச் செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக செலுத்த வேண்டிய மொத்தத் தொகையும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 450,388 இனால் ஆண்டின் பற்றாக்குறை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 98,211 கூட்டுத்தொகையான பொறுப்புக்களுக்காக ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,778,653 ஆக இருந்ததுடன், அதற்குரிய உபயோகப் பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,877,227 ஆனமையால் வேறுபாடு ரூபா 98,574 ஆகும்.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 03 முதல் 06 வருடங்கள் வரையிலான காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 24,443 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,588,424 ஆகும்.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக்கோவை | |
| நிதிப்பிரமாணம் 571 | 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்குரிய ரூபா 6,138,845 தொகையான காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வைப்புப் |

பணத்தில் பொதுச் சந்தைக் கடை முன்கூட்டிய விற்பனை அடிப்படையிலான வாடகைப் பணம் ரூபா 4,757,859 ஆக இருந்ததுடன் அந்தப் பணம் கடைகளை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தமையும் அது வைப்புக் கணக்கின் ஊடாக தீர்க்கப்படாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக் கோவை

---------------------------------------------------

261.2.2 ஆம் விதி

2012 செப்தெம்பர் மாதம் வரை செலுத்தப்பட்ட ரூபா 69,038 தொகை கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

283.4 ஆம் விதி

ரூபா 43,824 கூட்டுத்தொகையான வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 காசோலைகள் தொடர்பாக மாகாண நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை - 2006

---------------------------------------------------------

3.9.1 ஆம் பிரிவு

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,244,642 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதன் நிர்மாண நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியமை தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் போது அதற்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு வழங்கக்கூடிய ஆகக்கூடிய எல்லை ரூபா 2,000,000 இனை விஞ்சி நிர்மாணங்கள் 4

பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டு கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக அங்கீகரிக்கப்பட்ட 4 சங்கங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 4,513,231 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,352,552 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 5,865,783 வீழ்ச்சியொன்றைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 5,865,783 தொகை வீழ்ச்சியடைவதற்கு 03 வருமான விடயங்களில் குறைவும் 06 செலவின விடயங்களில் அதிகரிப்பும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்டமீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 |
| i. | ஆதனவரியும் வரியும் | 190 | 119 | 1,061 | 975 | 71 | 96 | 167 |
| ii. | வாடகை | - | - | 2,540 | 2,540 | - | - | - |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | 190 | 190 | - | - | - |
| iv | ஏனைய வருமானம் | - | - | 80 | 633 | - | - | - |

சபையினால் வழங்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் ஆதனவரி மற்றும் வரிகளிலிருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 167,000 ஆக இருந்த போதும் கணக்கின் பிரகாரம் அந்த மீதி ரூபா 226,068 ஆக இருந்தது.

### 2.3.2 ஆதனவரி

01 வருடம் முதல் 09 வருடங்கள் வரை ரூபா 92,297 தொகையான ஆதனவரி மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

மீளாய்வாண்டில் அறிவித்தல் பதாதைக் கட்டணம் அறவிடல் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 10 அறிவித்தல் பதாதைகளுக்காக ரூபா 15,065 தொகையான ஆகக் குறைந்த வருமானமொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயலாற்றல் மீளாய்வு

------------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

--------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பிரதேச சபையின் மூலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தைத் தொகுதியின் 10 கடைகள் 2011 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கடைகளை நிர்மாணிப்பதற்காக முற்பண அடிப்படையில் ரூபா 10,190,000 தொகை பெறப்பட்டிருந்தது. 2010 நவம்பர் 03 ஆந் திகதிய சப்ரகமுவ மாகாண மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மேல்மாடியின் கடையொன்று ரூபா 5,000 வீதமும், கீழ் மாடியின் அறையொன்று ரூபா 7,500 வீதமும் வாடகைக்கு வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த மதிப்பீடு மூன்று வருட காலத்திற்காக அமுலிலிருக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2010 நவம்பர் மாதம் 24 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது கடையொன்றிற்கு ரூபா 1,250 வீதம் அறவிடுவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டமையால் 2011 சனவரி மாதம் முதல் 2014 திசெம்பர் வரை கடைகளை வாடகைக்கு வழங்கியதால் ரூபா 2,400,000 நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) முன்பள்ளிப்பாடசாலை மற்றும் ஆயுர்வேத வைத்திய நிலையம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக காணியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 30,000,000 தொகையொன்று தனியார் காணி உரிமையாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தும், காணியைக் கொள்வனவு செய்யும் போது பிரதான மதிப்பீட்டாளரின் அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ரூபா 47,700 தொகையான ஊழியர் பிணை வைப்புப் பணம் ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் சேமிப்புக் கணக்குப் புத்தகங்களில் வைப்புச் செய்வதற்குப் பதிலாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பணி இடமாற்றம் பெற்றுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 56,380 கூட்டுத்தொகையான ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 மே 21 ஆந் திகதி சுற்றாடல் அமைச்சிலிருந்து கழிவுப் பொருள் பாத்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 30,000 தொகைக்குரிய பணிகள் மேற்கொள்ளப்படாது 2014 ஆம் ஆண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) தனியார் இறப்பர் தோட்டத்திற்கு தொடர்புபடுத்தும் வீதியொன்றான ஊறுமீவல அஜ்மீர்வத்த ஊடான பேரகஸ் சந்தி வீதி எந்தவொரு பயனாளியுமின்றி ரூபா 196,450 செலவில் வ105 அடி நீளத்திற்கு கொங்கிரீட் இடப்பட்டிருந்தது.

(ஆ) அமுவக்க தேவாலங வீதிக்கு கொங்கிரீட் இடல் மற்றும் பக்கச்சுவர் கட்டுதலின் கீழ் தேவாலங வீதி ஆரம்பிக்கின்ற இடம் தெற்குப்பக்கத்தில் அமைந்துள்ள வீட்டு முற்றத்தில் ரூபா 100,000 செலவில் 6 மீற்றர் நீளப்பக்கமாக பக்கச் சுவர் கட்டப்பட்டிருந்தது. பக்கச் சுவருக்காக 6’’X9’’ கல் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதனைவிட பாரியளவில் கல் பயன்படுத்தப்பட்டிருந்தமையும், பக்கச்சுவர் பூர்த்தி செய்யப்படாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையும் 2015 மார்ச் 18 ஆந் திகதிய களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் வீதாச்சி ஹேன வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்காக ரூபா 700,000 அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை செலவிட்டு அந்த வீதியின் சரிவுடன் கூடிய வளவிற்காக 11.9 மீற்றர் நீள கொங்கிரீட் பக்கச் சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த பக்கச் சுவரைச் சுற்றியுள்ள பகுதிகளில் "தேன்வதை" போன்ற பழுதுகள் கணிசமான அளவில் காணப்பட்டதுடன் கொங்கிரீட் போடுவதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட பாதுகாப்புப் பலகை சரியான பிரகாரம் பொருத்தப்படாமையினால் சுற்றியுள்ள பகுதிகளில் சிராகப் பூர்த்தி செய்யாமல் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) ரூபா 100,000 செலவில் அதிக சரிவுடன் கூடிய யட்டவத்த உப வீதியின் 54 அடிக்கு கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. எனினும் அந்த வீதி நெடுகிலும் நீர் அடித்துச் செல்கின்றமையினால் கொங்கிரீட் பகுதியொன்று கழுவிச் செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) ரூபா 100,000 செலவில் வியலவத்த வீதிக்கு 54 அடி நீளத்தில் கொங்கிரீட் இடப்பட்டிருந்ததுடன் வீதியில் கனரக வாகனம் செல்கின்றமையால் ஆரம்ப இடத்தில் 4 இடங்கள் உடைந்திருந்தது. அவ்வாறே கனரக வாகனங்கள் செல்வதைத் தடுப்பதற்கு வீதியில் பதாதையொன்று பொருத்தப்பட்டிருக்க வில்லை.

(ஊ) ரூபா 3,244,642 தொகையான கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தை நிர்மாணித்தல் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கும் போது எவ்வித அங்கீகாரமும் இன்றி திரட்டித் தயார்செய்தல் (Mobilization) முற்பணமாக உடன்படிக்கைப் பெறுமதியில் 20 சதவீதம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக பிணை எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை.

(எ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவரினாலும் பிரதேச சபையின் தலைவரினாலும் 2012 மே 30 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைப் பத்திரத்தில் 2.22 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 2 வாரங்களில் கூட்டுப்பசளை உற்பத்தி ஆரம்பிக்கப்பட வேண்டுமென இணங்கப்பட்டிருந்த போதும் 2013 யூன் 8 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த கூட்டுப்பசளை செயற்திட்டத்தில் 2015 மார்ச் 18 ஆந் திகதி வரை கூட்டுப்பசளை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு ரூபா 3,000,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது இலாப நோக்கமிடப்பட்ட மதிப்பீடு தயாரிக்க முடியாதிருந்ததுடன் நேர் ஊழியம் பயன்படுத்தப்பட்டு சபையின் பராமரிப்புப் பிரிவின் மூலம் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய போதிலும், பன்னல பொது மலசல கூடத்தை பழுதுபார்ப்பதற்காக பன்னல கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 2014 நவம்பர் 24 ஆந் திகதி ரூபா 176,516 தொகையும், 2014 திசெம்பர் 17 ஆந் திகதி ரூபா 246,368 தொகையும் ஆக ரூபா 422,884 தொகை சுற்றறிக்கைக்கு முரணாகச் செலுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறே இந்தப் பணம் இனங்காணப்பட்ட வேறு செயற்திட்டத்திற்காக மாத்திரம் செலவிடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக சபையின் பொதுவான செலவினங்களுக்காக ரூபா 362,152 தொகை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் நிதி மற்றும் நிர்வாக விதிக் கோவையின் 5(7) இன் பிரகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2014 இன் பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளிலிருந்து 11 சந்தர்ப்பங்களில் ரூபா 39,600 கூட்டுத்தொகையான மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்